கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

கலை கலாசார பீடம் /புவியியற்துறை

நான்காம் வருட முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு

~~2009/2010~~ **(2015 March)**
2011/2012

**GEOS 4104:** மனிதவள அபிவிருத்தி
(Human Resource Development)

11 MAY 2015

நேரம் 03 மணித்தியாலங்கள்

- எவையேனும் நான்கு (04) வினாக்களுக்கு விடை தருக.
- எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.

01. a. வளர்முக நாடுகள் பலவற்றில் 1970களின் ஆரம்பகாலப் பகுதியிலிருந்து மனிதவள அபிவிருத்தியில் கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டிய தேவையொன்று உருவாகியமைக்கான காரணங்கள் யாவை?

(12 புள்ளிகள்)

b. மனிதவளத் திட்டமிடல் தொடர்பாக முன்வைக்கப்பட்ட புதிய அணுகுமுறைகளைச் சுருக்கமாக விளக்குக.

(13 புள்ளிகள்)

02. a. மனிதவள மேம்பாட்டில் கல்வி முக்கியமானதொரு அங்கமாக விளங்குவதற்கான காரணிகளைச் சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

b. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் கல்வித்துறை தொடர்பில் எதிர்கொள்ளும் பிரதான சவால்களையும் அவற்றைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளையும் ஆராய்க.

(15 புள்ளிகள்)

03. a. 'மனிதவள அபிவிருத்தியினை இனங் காண்பதற்கான பிரதான மாறிகளில் மனிதனின் ஆரோக்கிய நிலையும் ஒன்றாகும்'. இக் கூற்றின் உள்ளடக்கத்தினை விளக்குக.

(12 புள்ளிகள்)

b. இலங்கையில் ஆரோக்கியமான தொழிற்படை ஒன்றினை உருவாக்குவதில் சுகாதாரத் துறை மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை உதாரணங்களுடன் ஆராய்க.

(13 புள்ளிகள்)

04. ‘இலங்கையின் எழுத்தறிவு வீதம் உயர்வாகக் காணப்படினும் அதன் பிரதிபலிப்பினை எல்லாப் பிரதேசங்களிலும் அவதானிக்க முடிவதில்லை’. இக்கூற்றின் பொருத்தப்பாட்டி பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.

(25 புள்ளிகள்)

05. ஊழியப்படையினைத் திட்டமிடுதல் தொடர்பாக விருத்தியடைந்த சந்தைப் பொருளாதார நாடுகள், வளர்முக நாடுகள் கையாண்ட உபாயங்களை எடுத்துக் காட்டி அவற்றின் சாத பாதக நிலைமைகளைச் சுருக்கமாக விளக்குக.

(25 புள்ளிகள்)

06. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினுக்கு விளக்கக் குறிப்புத்தருக.

a. இலங்கையில் கடந்த மூன்று தசாப்தங்களாக ஊழியப்படையில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள்.

b. நாடொன்றின் வேலைவாய்ப்புக்களைத் திட்டமிடும் போது திட்டமிடலாளர் ஒருவர் கருத்தில் கொள்ள வேண்டிய அம்சங்கள்.

c. மனிதவளத்தின் மீதான முதலீடும் அதன் தாக்கங்களும்.

(12.5x2 = 25 புள்ளிகள்)